[19th November 1963

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மத்திய திட்டக் கமிஷன் கொடுக்கக்கூடிய திட்டங்களைத்தான் பரிசீக்க இங்கே உள்ள குழுவுக்கு உரிமை உண்டா அல்லது இந்தக் குழுவே புதிய திட்டங்களை உருவாக்க உரிமை உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மாநில அரசாங்கம் இந்த மாநிலத்துக்கு தேவையான திட்டங்கள், இருக்கக்கூடிய வருவாய் நிலை எல்லாவற்றையும் ஆராய்ந்து திட்டம் தயாரித்து அதைப் பின்னால் மத்தியக் குழு ஆராய்ந்து அது ஏற்றுக் கொள்ளப் படுகிறது.

Publicity for Plan Programmes

* 306 Q.—Sri K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether a team of experts visited this State from the Centre in connection with improving the publicity of the plan programmes; and

(*b*) details of their suggestions?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம் ஐயா.

(இ) இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழு யூனியனில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும் விஜயம் செய்த பிறகு, தனது அறிக்கையை இந்திய அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கும். அறிக்கையை இந்திய அரசாங்கம் பரிசிலனை செய்த பிறகு, அது இந்த மாநில அரசாங்கத்திற்குக் கிடைக்கும்.

நாசரெத் பாலிடெக்னிக்

* 307 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் தாலூகாவில் உள்ள நாசரெத் பாலிடெக்னிக்கை மூடுவதாக சர்க்காருக்கு தகவல் கிடைத்துள்ளதா ?

(இ) அதைத் தொடர்ந்து நடத்துமாறு கோரி, திருச்செந்தூர் மக்கள் சர்க்காருக்கு விண்ணப்பித்துக்கொண்டுள்ளார்களா ?

(உ) அதன்மீது எடுக்கபட்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes.

(*c*) The Government have decided to close down the institution, as requested by the management. The students of the above polytechnic who have passed their first year course have been admitted for their second year course in the nearby polytechnics at Virudhunagar, Talavuthu, Nagercoil and Madurai. A Government Polytechnic has been started at Tuticorin in lieu of the above Polytechnic and admission has been started afresh with effect from this year.